# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 09 புதன்கிழமை 26.07.2023 கதிர் 36



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்


# அரசமைப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதி ஒளிந்து கொண்டிருக்கிறார்!

## அநுரகுமார திஸாநாயக்க குற்றச்சாட்டு



அரசமைப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஜனாதிபதி ஒளிந்து கொண்டிருக்கிறார், என்று ஜே.வி.பியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

பெல்மதுல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்ற காலத்திலிருந்து, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர் மக்கள் மத்தியில் பொதுக் கூட்டமொன்றைக்கூட நடத்தி நாம் காணவில்லை. மக்கள் ஆணையால் ஆட்சிக்கு வராத அவர், அரசமைப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒளிந்து கொண்டிருக்கிறார்.

இன்று வைத்தியசாலைகளில் மருந்துத்தட்டுப்பாடு நிலவி வருகிறது. ஆனால், ஜனாதிபதியோ நாட்டின் பொருளாதாரம் உயர்வடைவதாகக் குறிப்பிடுகிறார்.

மத்திய வங்கியின் அறிக்கையொன்று அண்மையில் வெளியா 2➤

## பிம்ஸ்டெக் செயலாளர் நாயகம் ஜனாதிபதி ரணில் சந்தித்தனர்

பிம்ஸ்டெக் பொதுச் செயலாளர் டென்சின் லெக்பெல், இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆகியோருக்கிடையில் சந்தித்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. நேற்றைய தினம் இலங்கை ஜனாதிபதி அலுவலகத்தில் குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.



அதன்போது, பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் பொதுச் சுகாதார மேம்பாடு குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

வங்காள விரிகுடாவை 2➤

## வவுனியாவில் வாழ்கின்ற பொதுமக்கள் பொலிசாரில் நம்பிக்கை இழந்துவிட்டனர்!

### குலசிங்கம் திலீபன் எம்.பி. குற்றசாட்டு

வவுனியா மாவட்டத்தில் மக்கள் அச்சத்தோடு வாழ வேண்டிய சூழ்நிலைக்கு முழுக் காரணம் பொலிஸாரே!, என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான குலசிங்கம் திலீபன் குற்றசாட்டை முன்வைத்துள்ளார்.

வவுனியா மாவட்டச் செயலகத்தில் இன்று இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த இரண்டு மாதங்களாக வவுனியாவில் மக்கள் அச்ச உணர்வுக்கு மத்தியில் வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு முற்று முழுக் காரணம் பொலிஸார்தான்.

வவுனியா மாவட்டத்திலே இருக்கின்ற நகர பொலிஸ் நிலையம் மற்றும் அங்கு இருக்கக் கூடிய குற்றத் தடுப்புப் பிரிவு இந்த இரண்டிலும் மக்களுக்கான நம்பிக்கை தற்போது இழந்த நிலைமையே காணப்படுகின்றது.

இது தொடர்பாக இன்று நாங்கள் வவுனியா மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கின்றோம். 2➤

## பேலியகொட மெனிக் சந்தையில் பாரிய போராட்டம் – பலர் கைது!





பேலியகொட மெனிக் சந்தையில் அமைந்துள்ள கடைகளை வெளி மாவட்ட வியாபாரிகளுக்கு வழங்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, கொழும்பு - பேலியகொட மெனிக் சந்தை வியாபாரிகள் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை இன்று காலை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வியாபாரச் சம்மேளனத்தின் தலைவர் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 2➤

## மாணவர்களுக்கு இலவச சீருடைகள் வழங்குவது நிறுத்தப்படும் அபாயம்!



பாடசாலைச் சீருடைகளை அஸ்வெசும பயனாளிகளுக்கு மாத்திரம் வழங்க அரசாங்கம் தயாராகி வருவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

அதன்படி, பாடசாலைச் சீருடைக்குப் பதிலாக, அஸ்வெசும கணக்கில் பணம் வரவைப்பதன் மூலம் இத்திட்டத்தை ஆரம்பிக்க ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இதன் மூலம் 43 இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கு இதுவரையில் இலவசமாக வழங்கப்பட்ட சீருடைகள் நிறுத்தப்படும் அபாயம் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 2➤

## இலங்கை கிரிக்கெட்டில் நிதி மோசடி! அடுத்த நாடாளுமன்ற அமர்வில் விவாதம்

கடந்த ஆண்டில் நடைபெற்ற ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கட் தொடரில் இலங்கை கிரிக்கெட்டில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பில், அடுத்த நாடாளுமன்ற அமர்வில் விவாதம் ஒன்று நடைத்துவதற்குக் கோரிக்கை முன்வைக்கப்படவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே, இது தொடர்பில் எதிர்வரும் ஓகஸ்ட் 8 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நாடா 2➤

## இந்தியப் பிரதமர் மோடியின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை

மணிப்பூர் விவகாரத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைப் பதிலளிக்க வலியுறுத்தி, மக்களவையில் எதிர்க்கட்சிகள் நம்பிக் கையில்லாப் பிரேரணையைத் தாக்கல் செய்யத் தீர்மானித்துள்ளன.



கடந்த 20ஆம் திகதி ஆரம்பமாகிய இந்திய நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடர் எதிர்வரும் ஓகஸ்ட் 4 ஆம் திகதி வரை இடம்பெறவிருக்கின்றது.

இந்தக்கூட்டத்தொடரில் மணிப்பூர் விவகாரம், மத்திய அமைப்புகளை எதிர்க்கட்சிகளுக்கு எதிராக பயன்படுத்துவது உள்ளிட்ட பிரச்சினைகளை எழுப்ப எதிர்க்கட்சிகள் திட்ட 2➤

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

# 15ஆவது ஆண்டுக் கனேடியத் தமிழர் நிதி சேர் நடை செய்தியாளர் சந்திப்பு கொழும்பில் இடம்பெறுகிறது

கனேடியத் தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் 15ஆவது ஆண்டுக் கனேடியத் தமிழர் நிதி சேர் நடை-யை முன்னிட்டு சிறப்புச் செய்தியாளர் சந்திப்பு ஒன்று இடம்பெறவுள்ளது.

இந்தச் செய்தியாளலர் சந்திப்பு மாநாடு ஜுலை மாதம் 28 ஆம் திகதி காலை காலை 11 முதல் 11.45 மணி வரை 31, செனட் கில்டாஸ் ஒழுங்கை, மரைன் ட்ரைவ், கொழும்பு 3 எனும் முகவரியில் அமைந்துள்ள ஹோட்டல் மாராதாவில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

கடந்த 14 ஆண்டுகளுக்கு மேலாக, கனடிய தமிழ்ப் பேரவை இந்த நிதி சேர் நடையை ஏற்பாடு செய்து வருகிறது. இதன் மூலம் இன்று வரை ஒரு மில்லியன் கனேடிய டொலர்களிற்கும் மேலான உதவித் தொகைகள் திரட்டப்பட்டேதாடு, இந்த நிதி இலங்கையிலும் கனடாவிலும் பலரின் வாழ்வில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்திய பல்வேறு பணி களுக்காக அர்ப்பணிக்க-ப்பட்டுள்ளதாக வும் தெரிவிக்கப்படுகிறது.

முக்கியமாக, கடந்த ஆண்டு திரட்டப் பட்ட நிதி மூலம் இலங்கையில் உள்ள ஆறு மாவட்டங்களில் இருக்கும் ஆறு வைத்தியசாலைகளுக்கு உயிர் காக்கும் மருந்துப் பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்த ஊடக சந்திப்பின் போது 2022 ஆம் ஆண்டு திரட்டப்பட்ட நிதியின் செயற்திட்டங்கள் மற்றும் பயன்பாடுகள் குறித்தும், 2023 ஆம் ஆண்டின் கனடியத் தமிழர் நிதி சேர் நடை நிகழ்வு ஏற்பாடுகள் தொடர்பான அறிவிப்பும் அதன் மூலம் திரட்டப்படும் நிதியைப் பயன்படுத்தி இலங்கையில் மேற்கொள்ளவுள்ள செயற்பாடுகள் குறித்தும் ஊடகச் சந்திப்பில் விரிவாக விளக்கமளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் அனைவரதும் ஆதரவையும் பங்களிப்பையும் எதிர்பார்ப்பதாக கனேடியத் தமிழர் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

மேலதிக விபரங்கள் தொடர்பில் அறிந்துகொள்ள (416) 240-0078 என்ற தொலைபேசி இலக்கத்திற்கோ அல்லது info@canadiantamilcongress.உய என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளலாம் எனவும், கனடியத் தமிழர் நிதி சேர் நடை குறித்து மேலும் அறிந்துகொள்வதற்கு www.tamilcanadianwalk.ca என்ற இணையத்தளத்திலும் பார்வையிட முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

# போக்குவரத்து விதிமீறல்களுக்கான புதிய செயல்முறை நடைமுறையில்



போக்குவரத்து விதிமீறல்களுக்கான தகைமை இழப்பு புள்ளிச் செயல்முறை அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் தி-கதி முதல் நடைமுறைக்கு வரும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த முறையின் கீழ், 24 தண்டப் புள்ளிகளைப் பெறும் சாரதியின் அனுமதிப்பத்திரம் உடனடியாக இரத்துச் செய்யப்படும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

வீதிகளில் இடம்பெறும் தவறுகளுக்கு அந்த இடத்திலேயே வைத்து அபராதம் அறவிடப்படும் முறையை நடைமுறைப் படுத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதற்கான அனைத்துப் பரிவர்த்தனைகளையும் டெபிட் அல்லது கிரெடிட் கார்ட் மூலம் பெற்றுக்கொள்ள மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஏழு தசாப்தங்களாக நடைமுறையில் உள்ள மோட்டார் போக்குவரத்துச் சட்ட-த்தைப் புதுப்பித்து, புதிய விடயங்களை அறிமுகப்படுத்த போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையி-னால் இயக்கப்படும் 50 மின்சாரப் பேருந்-துகளை சேவையில் இணைப்பதற்கான திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## மாணவர்களுக்கு இலவச...

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தருவதற்கான முக்கிய காரணம் இலவசமாக வழங்கப்படும் சீருடை மற்றும் பாடப்புத்தகங்களே எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வவுனியாவில் வாழ்கின்ற...

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

இது தொடர்பாக ஜனாதிபதியிடமும் முறையிட இருக்கின்றோம். இங்கு நடைபெறும் குற்றச்செயல்கள் கட்டாயம் தடுக்கப்படவேண்டும்.

கடந்த காலங்களில் ஒருவர் அல்லது இரண்டு பேர் குற்றச் செயல்களில் ஈடுபட்டதை அறிந்திருக்கின்றோம். தற்போது பத்துப்பதினைந்து பேர் ஒன்றாகச் சென்று, ஒரு வீட்டுக்குள்ளே புகுந்து வெட்டி, எரித்திருக்கிறார்கள்.

குறித்த சம்பவத்தில் இதுவரைக்கும் சந்தேகத்தின் பேரில் ஒருவர்கூடக் கைதுசெய்யப்படவில்லை என பொலிஸ் ஊடகக் பேச்சாளர் கூறியிருக்கிறார்.

இவர்கள் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை தொடர்ந்தும் கண்காணித்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

சில விமர்சனங்கள் இருக்கின்றன. அதனை உரிய இடங்களுக்குத் தெரிவிப்போம், எனவும் அவர் கூறியுள்ளார். (க)

## அரசமைப்பு அதிகாரத்தை...

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

னது. இதில், 68 வீதமான மக்கள் இரண்டு வேளை உணவினை மட்டுமே உற்கொள்வதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்தாண்டு, கடனைத் திருப்பிச் செலுத்தியும் எரிபொருள், எரிவாயு இருந்ததாகக் கூறப்பட்டது. ஆனால், இவ்வாண்டு 600 கோடி டொலர் கடனை திருப்பிச் செலுத்தப் போவதில்லை என்று கூறப்படுகிறது.

அரச சொத்துக்களை விற்பனை செய்து, அதன் ஊடாகக் கிடைக்கும் டொலரைக் காண்பித்து, இந்த நாடு முன்னேறி விட்டதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார், எனவும் அவர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

## பிம்ஸ்டெக் செயலாளர்...

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

ஒட்டிய தெற்காசிய மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுக்கு இடையே தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை உருவாக்குவதை பிரதான நோக்கமாகக் கொண்ட பிம்ஸ்டெக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர், பொதுச் சுகாதாரத்திற்கான இலங்கையின் அர்ப்பணிப்பைப் பாராட்டியதோடு, அமைச்சர்கள் மட்டக் கூட்டங்களின் அவசியத்தையும் வலியுறுத்தியிருந்தார்.

இந்த சந்திப்பில் அதிபரின் சர்வதேச உறவுகள் தொடர்பான பணிப்பாளர் தினூக் கொழும்பகேயும் கலந்துகொண்டிருந்தார்.

## பேலியகொட மெனிக்.....

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

மெனிக் சந்தையில் ஆர்ப்பாட்டம் நடத்த தடைவிதித்து நேற்றைய தினம் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப் பித்திருந்தது. எனினும், இன்றைய தினமும் வியாபாரிகள் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதனையடுத்தே வியாபார சம்மே ளனத்தின் தலைவர் உட்பட பலர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சம்பவ இடத்தில் பொலிஸாரும் இராணுவத் தினரும் குவிக்கப்பட்டிருந்தனர். (க)

## இலங்கை கிரிக்கெட்டில் ...

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

ளுமன்ற அமர்வில் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை ஒன்றை முன்வைக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த விவாதத்தின்போது, விளையாட்டுத்துறை அமைச்சரிடம் குறித்த மோசடி விவகாரம் தொடர்பில் வினவவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2022 ஆம் ஆண்டு உலக கிண்ண ரி-20 தொடரின்போது, இலங்கைக் கிரிக்கட் அதிகாரிகளுக்காக மாத்திரம் 67 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட்டின் தலைவர் ஷம்மி சில்வா 11.7 மில்லியன் ரூபாவும், செயலாளர் மொஹான் டி சில்வா 5.4 மில்லியன் ரூபாவும், உப தலைவர்களான ஜயந்த தர்மதாஸ 5.1 மில்லியன் ரூபாவும், ரவின் விக்ரமரட்ன 4.7 மில்லியன் ரூபாவும், பொருளாளர் லசந்த விக்ரமரட்ன 4.8 மில்லியன் ரூபாவும், உதவிச் செயலாளர் சுஜீவ கொடலியத்த 4.7 மில்லியன் ரூபாவும், கிரிஷாந்த கபுவத்த 3.6 மில்லியன் ரூபாவும் செலவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல 32 வீரர்கள் உள்ளிட்ட 52 பேருக்கான விசா அனுமதியை இலங்கை கிரிக்கட் கோரியிருந்தது. எனினும், அவர்களில் இலங்கை கிரிக்கெட்டுடன் தொடர்பில்லாத 35 பேர் உள்ளடங்கியிருந்ததாகவும் கண்ட றியப்பட்டுள்ளது.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# கொழும்பில் தாயும் மகளும் மாயம் கணவர் பொலிசாரிடம் முறைப்பாடு!

மஹரகம, பத்திரகொட, விஹாரவத்த வீதியில் வசிக்கும் தாயும் மகளும் காணாமல் போயுள்ளதாக முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

23 வயதுடைய இஷாதி ரங்கிகா என்ற தாயும் 3 வயதுடைய ஹிமாஷி என்ற பெண் குழந்தையும் 8 நாட்களாக காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்க-ப்பட்டுள்ளது.

கடந்த 19ஆம் திகதி முதல் தனது மனைவியும் மகளும் காணாமல் போயுள்ளதாக கணவர் மஹரகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்-துள்ளார்.

தான் 19ஆம் திகதி காலை கிருலப்பனை பாமன்-கடை பழக்கடைக்கு வேலைக்குச் சென்றதாகவும், அன்று இரவு 10 மணியளவில் வீடு திரும்பியபோது மனைவியும் மகளும் வீட்டில் இல்லை எனவும் கணவர் சமிந்து திவங்க தெரிவித்துள்ளார்.

அதனையடுத்து அவர், தெமட்டகொடயில் வசிக்கும் தாயாரிடம் மனைவி மற்றும் மகள் குறித்து கேட்ட போது, அவர்கள் அங்கு செல்லவில்லை எனக் கூறியதாக சமிந்து திவங்க குறிப்பிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்துள்ள மஹரகமபொலிஸார்,

அப்பகுதியில் உள்ள கண்காணிப்பு கமராக்களையும் ஆய்வு செய்யவுள்ளதாக தெரிவித்தனர்.

தாய் மற்றும் மகள் தொடர்பில் தகவல் தெரிந்திருப்பின் 0112-850700 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி மஹரகம பொலிஸாருக்கு அறிவிக்குமாறு, பொதுமக்களை அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (க)

## வவுனியாவில் வாள் வெட்டு மேலுமொரு நபர் உயிரிழப்பு!



வவுனியா, தோணிக்கல் பகுதியில் கும்பல் ஒன்றினால் கடுமையாகத் தாக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நபர் உயி ரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் இன்று அதிகாலை உயிரிழந்-துள்ளதாக வைத் தியசாலை வட்டாரங்க-ளிலிருந்து தகவல் வெளியிடப்பட்டுள்ளது. வவுனியா, உக்குளாங்குளம் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய ச.சுகந்தன் என்பரே இவ்வாறு உயிரி ழந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வவுனியா, தோணிக்கல் பகுதியில் வீடொன்றுக்குள் நுழைந்த இனந்தெரியாத கும்பல் ஒன்று, வீட்டை எரித்ததோடு, அங்கிருந்தவர்கள் மீது வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டிருந்தது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் மூச்சுத் திணறல் ஏற்பட்டு, இரண்டு மாதக் கர்ப்பிணியான பாத்திமா என்ற 21 வயது இளம் குடும்பப் பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன், 10 பேர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு உயிரிழந்த பெண்ணின் கணவன், பலத்த தீக் காயங்களுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி இன்று அதிக-ாலை உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கனடாவின் கருத்தை நிராகரித்து இலங்கை அரசாங்கம் அறிக்கை

இலங்கையில் கடந்த கால மோதல்கள் பற்றிய தவறான, திரிபுபடுத்தப்பட்ட கதையை கனடா தொடர்ந்து குறிப்பிட்டு வருவதாக, வெளிவிவகார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கடந்த 23 ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையில் உள்ளடக்கியிருந்த, தமிழ் இனப்படுகொலை நினைவு தினம் தொடர்பான கூற்றை நிராகரிப்பதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது, உள்ளூர் வாக்கு வங்கி மற்றும் தேர்தல் இலாபங்களை மட்டுமே இலக்காகக் கொண்டதுடன், பரந்த இன நல்லிணக்க இலக்குகளுக்கு உகந்ததல்ல என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள அனைத்து சமூகங்களுக்கும், வெளிநாடுகளில் உள்ள இலங்கை பாரம்பரியத்தை கொண்ட சமூகங்களுக்கும் இடையே ஸ்திரத்தன்மை, முன்னேற்றம், சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தும் முயற்சிகளில் இலங்கைக்கு ஆதரவளிக்குமாறு கனடா மற்றும் அதன் தலைவர்களை இலங்கை கோருவதாகவும் வெளிவிவகார அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

# ஜப்பானின் தேசிய மக்கள் தொகை குறைய வெளிநாட்டினர் எண்ணிக்கை அதிகரிப்பு!

ஜப்பானியர்களின் எண்ணிக்கை இதுவரை இல்லாத வேகத்தில் குறைந்துள்ள அதே நேரத்தில் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை அங்கே கிட்டத்தட்ட 3 மில்லியனாக உயர்ந்துள்ளதாக ஜப்பானிய அரசாங்கத் தரவு சுட்டிக்காட்டியுள்ளது.

ஜப்பானிய சமுதாயம் நாடு முழுவதும் முதுமை அடைந்து வருவதாகவும், சுருங்கி வரும் மக்கள் தொகையை ஈடுசெய்வதில் வெளிநாட்டுப் பிரஜைகள் எப்போதும் பெரிய பங்கை வகிப்பதாகவும் தரவுகள் காட்டுகின்றன.

உள்நாட்டு விவகாரங்கள் மற்றும் தகவல் தொடர்பு அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட ஜனவரி 1, 2023 இன் குடியுரிமைப் பதிவுத் தரவுகளின்படி, ஜப்பானிய குடிமக்களின் எண்ணிக்கை 14 ஆவது ஆண்டில், 122.42 மில்லியனாகக் குறைந்துள்ளது.

முதல் முறையாக, அனைத்து 47 மாகாணங்களிலும் ஜப்பானிய குடியிருப்பாளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது என்று தரவு சுட்டிக்காட்டுகிறது.

ஜப்பானில் வசிக்கும் வெளிநாட்டினரின் எண்ணிக்கை 2.99 மில்லியனாக இருந்தது. இது முந்தைய ஆண்டை விட 10.7 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. இது ஒரு தசாப்தத்திற்கு முன்பு அமைச்சகம் தரவைக் கண்காணிக்கத் தொடங்கியதிலிருந்து ஆண்டுக்கு ஆண்டு மிகப்பெரிய அதிகரிப்பாக காணப்படுகின்றது.

குறைந்த பிறப்பு வீதம் காரணமாக 2008 இல் உச்சத்தை எட்டியதில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் மக்கள் தொகை வீழ்ச்சியடைந்து, கடந்த ஆண்டு மிகக் குறைந்த அளவை எட்டியுள்ளது. இதனிடையே, ஜப்பானிய அரசு சனத்தொகையை பெருக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கத்தின் பொருளாதார வளர்ச்சிக் கணிப்புகளை அடைவதற்கு 2040 ஆம் ஆண்டளவில் ஜப்பானுக்கு நான்கு மடங்கு வெளிநாட்டுத் தொழிலாளர்கள்



தேவைப்படுவதாக டோக்கியோவைச் சேர்ந்த பொது சிந்தனைக் குழுக்கள் கடந்த ஆண்டு தெரிவித்தது.

ஜனவரி 1, 2020 நிலவரப்படி, கொவிட் - 19 தொற்றுநோய் உலகம் முழுவதும் பரவுவதற்கு முன்பு, ஜப்பானில் 2.87 மில்லியன் வெளிநாட்டினர் வசித்து வந்தனர் என்றும், டோக்கியோவில் 4.2 சதவீதத்துடன் 5 லட்சத்து 81 ஆயிரத்து 112 வெளிநாட்டவர்கள் உள்ளதாகவும் தரவுகள் தெரிவிக்கின்றன.

## சீனாவின் பௌத்த ஆலயத்தில் தீ விபத்து - புத்தர் சிலை சேதம்



சீனாவின் கன்சு மாகாணத்தின் ஷாந்தன் கவுண்டியில் உள்ள பௌத்த ஆலயத்தில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தில் 115 அடி உயரமுடைய பிரம்மாண்ட புத்தர் சிலை சேதம் அடைந்துள்ளது.

கி.பி. 425 ஆம் ஆண்டு காலத்தை சேர்ந்த சிலை ஒன்றைப் பிரதிபலிக்கும் முகமாக இந்தப் புத்தர் சிலை செய்யப்பட்டதாகவும், சிலையின் ஒரு பகுதி மட்டுமே தீயில் கருகி சேதமடைந்துள்ளதாகவும் எஞ்சிய பகுதி பாதிப்படையாமல் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தின் கட்டமைப்புகள் தீயில் அழிந்துவிட்டதாகவும், ஆனால் ஆலயத்தின் கலாசார நினைவுச் சின்னங்கள் சேதமடையாமல் இருப்பதாகவும் சீனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தீ விபத்தில் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை எனவும், விபத்துக்காண காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது. (மி)

## இத்தாலியர்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு ஒரு பக்கம் மழை - மறுபக்கம் காட்டுத் தீ

இத்தாலியின் வட பகுதிகளில் சூறைக்காற்றுடன் பெய்துவரும் கனமழையால் அந்த நாட்டின் வர்த்தகத் தலைநகரான மிலானில் இயல்பு வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

வீதியோரங்களில் ஏராளமான மரங்கள் முறிந்து விழுந்ததால், பல பகுதிகளில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. மரங்கள் மேலே விழுந்ததில் 2 பெண்கள் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு நேர் மாறாக, தெற்குப் பகுதியில் அமைந்துள்ள பலேர்மோ நகரில் 48 பாகை செல்சியஸ் வரை வெப்பநிலை பதிவாகி, வனப்பகுதிகளில் காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது. காட்டுத் தீயினால் ஏற்பட்ட புகை மூட்டத்தில், அருகேயுள்ள விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டது.



காலநிலை மாற்றத்தால் இத்தாலி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக இத்தாலிய ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (மி)

## பேஸ்புக் நிறுவனத்துக்கு அபராதம் விதித்தது அவுஸ்திரேலிய நீதிமன்றம்

பேஸ்புக் நிறுவனம் 14 மில்லியன் டொலர் இழப்பீடு வழங்க வேண்டும் என அவுஸ்திரேலியாவில் உள்ள பெடரல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

மெட்டா நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ள ஸ்மார்ட் போன் அப்ளிக்கேஷன் மூலம், பயனாளர்களின் தனிப்பட்ட தகவல்கள், சரியான அறிவுறுத்தல்கள் இல்லாமல் சேகரிக்கப்படுவதாக எழுந்த குற்றச்சாட்டை முன்வைத்து நடைபெற்ற வழக்கிலேயே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மெட்டா நிறுவனத்திற்கு எதிராக அவுஸ்திரேலியாவின் நுகர்வோர் ஆணையத்தால் குறித்த வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இந்தச் செயலி, 2 லட்சத்து 71 ஆயிரம் முறை பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. (மி)



## கிறீசில் விமான விபத்து இரு விமானிகள் மரணம்

கிறீசில் காட்டுத் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சிறிய விமானம் விபத்துக்குள்ளானதில் இரு விமானிகள் உயிரிழந்துள்ளனர்.

எவியா தீவில் பற்றி எரிந்த காட்டுத் தீயைக் கட்டுப்படுத்தும் பணியில் கனடா எயார் நிறுவனத்தின் சிஎல்-215 ரக விமானம் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளையில், அருகில் இருந்த நீர் நிலையில் இருந்து தண்ணீரை எடுத்து நெருப்பை அணைக்கும் பணியின்போது, கட்டுப்பாட்டினை இழந்த விமானம் மலைப்பகுதியில் விழுந்து வெடித்துச் சிதறி விபத்துச் சம்பவித்துள்ளது.

இந்த விபத்தில் விமானியும், துணை விமானியும் அந்த இடத்திலேயே உயிரிழந்ததாக கனடா அரசு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, விமானிகளின் இழப்பிற்கு 3 நாட்கள் துக்கம் அனுசரிக்கப்படும் என கனேடிய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. (மி)

## சீனாவின் வெளியுறவுத்துறை அமைச்சு முன்னையவரை மீண்டும் நியமித்தது அரசு

சீனாவின் வெளியுறவுத்துறை அமைச்சராக பணியாற்றிய கின் கேங் அந்த பதவியில் இருந்து பணி நீக்கம் செயபட்டுள்ளார். இவர் 7 மாதங்கள் மட்டுமே சீனாவின் வெளியுறவுத்துறை அமைச்சராகக் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

புதிய வெளியுறவுத்துறை அமைச்சராக சீன நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் மீண்டும் வாங் யீ நியமிக்கப்பட்டுள்ளார்.

கின் கேங் கிற்கு வழங்கப்பட்ட புதிய பதவி தொடர்பான அறிவிப்பு இன்னமும் வெளியாகாத நிலையில், அவரின் பதவி மாற்றத்திற்கு உடல்நலம் மற்றும் அரசியல் காரணங்களை சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முன்பு வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த வாங் யீ, கடந்த ஆண்டு பொலிட்பீரோவுக்கு பதவி உயர்வு



பெற்று, கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய வெளியுறவு ஆணையத்தின் தலைவராக இருந்ததோடு, தற்போது மீண்டும் வெளியுறவுத்துறை அமைச்சராகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (மி)

# இலங்கையர்களுக்கு விசாக்களை வழங்கவுள்ள கொரிய அரசாங்கம்



இந்த வருடத்தின் இரண்டாம் பாதியில் கொரியாவில் பணியாற்றும் இலங்கையர்களுக்கு மேலும் 7 ஆயிரம் விசாக்களை கொரிய அரசாங்கம் வழங்கவுள்ளதாக கொரிய தூதுவர் உறுதி அளித்துள்ளார்.

புதிய கொரிய தூதுவர் மியோன் லீ மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோருக்கு இடையில் நேற்று அலரிமாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து இது தெரியவந்துள்ளது.

கொரியாவில் தற்போது 25,000 இலங்கைத் தொழிலாளர்கள் கொரியாவில் பணியாற்றி வருவதாகவும், இந்த ஆண்டு இறுதிக்குள் அந்த எண்ணிக்கை 32,000 ஆக உயர்த்தப்படும் என்றும் தூதுவர் கூறினார்.

இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்களை விரைவாக நிறைவு செய்வதற்கு மேலதிகமாக சில புதிய அபிவிருத்தித் திட்டங்களில் தமது நாடு செயற்படும் எனவும் தூதுவர் மேலும் தெரிவித்தார்.

பருவகால விவசாயத் தொழிலாளர் திட்டத்தின் கீழ், இலங்கையர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயுமாறு தூதுவரிடம் பிரதமர் வலியுறுத்தினார்.

# சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற வாகனம் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்து!

வெல்லவாய - கொஸ்லந்த பிரதான வீதியில், கொஸ்லந்த பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹிவல்கந்துர பகுதியில் சுற்றுலா பயணிகளை ஏற்றிச் சென்ற வான் இன்று காலை வீதியை விட்டு விலகி பள்ளத்தில் கவிழ்ந்துள்ளது.

வானில் சாரதி மற்றும் நான்கு பயணிகள் பயணித்துள்ளதுடன், விபத்தில் எவருக்கும் பாரிய காயங்கள் ஏற்படவில்லை. ஆயினும், வான் பாரிய சேதங்களுக்கு உள்ளாகியிருக்கிறது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொஸ்லந்த பொலிஸ் நிலைய அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கு புதிய துணைவேந்தர் நியமனம்



ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக சிரேஷ்ட பேராசிரியர் பத்மலால் எம். மனகே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்திற்கு முன்னர், பேராசிரியர் பத்மலால் எம்.மனகே பட்டதாரி கற்கைகள் பீடத்தின் பீடாதிபதியாகப் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

3 வருட காலத்திற்கு, உடன் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(க)

# கலாசாலையில் புற்றுநோய் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

கோப்பாய் ஆசிரியர்கள் கலாசாலையில் நூற்றாண்டு விழா கால புதன் ஒன்றுகூடலில் நேற்று, புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது

கலாசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், யாழ் போதனா வைத்தியசாலையின் புற்றுநோய்ச் சத்திர சிகிச்சை நிபுணர்களான டொக்டர் க.ஸ்ரீதரன், டொக்டர் தனுஜா மகேந்திரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். ஆசிரிய மாணவர் சார்பில் கருத்துரையை உடற்கல்வி நெறி ஆசிரிய மாணவி பூரணி நிஷாந்தன் ஆற்றினார். உடற்கல்வி நெறி ஆசிரிய மாணவர் சி. தினேஷ்குமார் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.07.2023இல் வெளியிடப்பெற்றது.